

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | அக்டோபர் 08, 2020 | புரட்சி 19 | முழக்கம் 11 | விலை: ரூ.3.00

## “சமூக விரோதிகள்”

‘மாப்பிள்ளை இவருதான்; ஆனா, அவரு போட்டிருக்கிற சட்டை என்னுடையதல்ல” என்று நடிகர் செந்திலை, ரஜினிகாந்த் கலாய்ப்பார். அந்தக் கதை இப்போது நீதிமன்றத் தீர்ப்புகளாகவே வரத் தொடங்கி விட்டன.

கரசேவகர்களாக அத்வானி, ஜோஷி என்று 32 பேர் கொண்ட ஒரு கும்பலே அயோத்தியில் கூடியிருந்திருக்கலாம். ஆனால், இவர்கள் இராமன் ‘சத்தியமாக’ மசூதியை இடித்தவர்கள் அல்ல – லக்னோ சிறப்பு நீதிமன்றமே கூறிவிட்டது.

இது என்ன புதுக் கதை? அப்படின்னா, மசூதியை இடிச்சது யாரு பாஸ்? அதுவா, அவர்களுக்கு லக்னோ நீதிமன்றம் ஒரு கவுரவப் பட்டத்தையே வழங்கியிருக்கிறது. ‘சமூக விரோதிகள்’ என்ற நாட்டின் மிக உயர்ந்த பட்டம்!

இந்தியா முழுவதிலிருந்தும் இலட்சக் கணக்கில் இரயில் ஏறி அயோத்திக்கு கடப்பாறை, இரும்புத் தடிகளோடு வந்து சேர்ந்த இராம பக்தர்கள் – சமூக விரோதிகளா? இராம பக்தர்களை இப்படியா புண்படுத்துவது? என்று ராம பக்தர்கள் கொந்தளிக்க மாட்டார்கள் என்று நாம் நிச்சயம் நம்பலாம். நீதிமன்ற அவமதிப்பு வந்து விடுமே!

அப்படீன்னா வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு என்று அத்வானியும், ‘சங்கி’களும் உருண்டு புரண்டு பாராட்டுகிறார்களே, இது நியாயமா? அந்த இராமபிரானுக்கே அது அடுக்குமா? என்று சமூக விரோதிகள் எதிர் கேள்வி கேட்கவும் கூடாது. அத்வானிகள் விடுதலையாக வேண்டும் என்றால், ‘இராம பக்தர்கள்’ சமூக விரோதிகள் என்ற நீதிமன்றம் தரும் பட்டத்தைப் பெருமையோடு ஏற்கத் தான் வேண்டும்.

அது சரி; ‘சமூக விரோதிகள்’ என்ற இராம பக்தர்கள், மசூதியை இடித்தது குற்றம் தானே! அங்கே இராமன் கோயிலைக் கட்டுவது இந்து தர்மமா?

ஏன் கட்டக் கூடாது? இராமன் – மசூதி இருந்த இடத்தில் தானே பிறந்தான்– பிறகு எங்கே போய் கோயில் கட்டுவது? இந்துக்கள் பூமியில் எங்கள் இராமனுக்கு கோயில் கட்டக் கூடாதா?

ஓ தாராளமாகக் கட்டுங்கள் ஜி! இராமனுக்கு கோயில் கட்டினால் கொரானா ஓடி விடும்! வேலை இல்லாத் திண்டாட்டம் ஒழிந்து விடும்; ஜி.எஸ்.டி. வரி பாக்கி மாநிலங்களுக்குக் கிடைத்து விடும்; பொருளாதார நெருக்கடி ஒழிந்து ‘கடாட்சம்’ பெருகும்! ‘இராமபிரான்’ நல்லதையே செய்வார் என்று சாதனைப் பட்டியலைப் போடுகிறார், ‘சமூக விரோதி’ பட்டம் பெற்றுள்ள இராம பக்தர்!

அது சரி; கோயில் கட்டினால்தான் ‘இராமன்’ கண் திறந்து, இந்த அவலங்களையெல்லாம் பார்ப்பானா?

வீணாகப் பேசாதீங்க சார்; உச்சநீதிமன்றமே கோயில் கட்ட அனுமதி கொடுத்து விட்டது. இதோ பாருங்க தீர்ப்பு எங்கள் கையில் இருக்குது!

சரிதான்; கிணறு வெட்டுனதற்கு இதோ இரசீது எங்கிட்ட இருக்கு; சும்மா விட மாட்டேன் என்ற வடிவேலு காமெடி நினைவுக்கு வருதா?

வரும்; ரஜினி காமெடியும் வடிவேலு காமெடியும் அயோத்தி காமெடிகளோடு எப்படி பொருந்திப் போகிறது, பார்த்தீர்களா?

இந்தக் காமெடிகள் எல்லாம் எங்கள் புராண காலத்திலேயே இருந்தது என்று இதற்கும் புராணப் பெருமை பேசாதீர்கள் ஜீ!

– கோடங்குடி மாரிமுத்து

# கொரோனா ஊரடங்கில் கழகத்தின் சாதனை

# 80 இணைய வழி கருத்தரங்குகள்

**கொரோனா ஊரடங்கு காலத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் இணையக் கருத்தரங்கங்கள் ‘Team Link’ மற்றும் முகநூல் வழியாக தொடர்ச்சியாக நடைபெற்று வந்தது. 01.04.2020 அன்று ‘Team Link’ வழியாக தொடங்கப்பட்ட கருத்தரங்கங்கள் 31.05.2020 அன்று வரை நடைபெற்ற கருத்தரங்கம் தினமும் காலை 11:30 மணிக்கு தொடங்கி நடைபெற்று வந்தது.**

‘தோழர் பெரியாரின் சமதர்மம்’ என்ற தலைப்பில் தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி - ஏப் 1 அன்றும், ‘இடஒதுக்கீடு சிக்கல்கள்’ என்ற தலைப்பில் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் - ஏப் 2 அன்றும், ‘நாத்திகமும் அறிவியல் மனப்பான்மையும்’ என்ற தலைப்பில் எட்வின் பிரபாகரன் - ஏப் 3 அன்றும், ‘மருத்துவத் துறையில் திராவிட இயக்கத்தின் சாதனை’ என்ற தலைப்பில் தமிழ்நாடு மாணவர் கழகம் பிரசாந்த் ஏப் 4 அன்றும், ‘கொளுத்துவோம் மனுதர்மத்தை’ என்ற தலைப்பில் தஞ்சை மாவட்டத் தலைவர் சாக்கோட்டை இளங்கோவன் ஏப் 5 அன்றும், ‘மணியம்மையார் போர்க் குணம்’ என்ற தலைப்பில் தேன்மொழி ஏப் 6 அன்றும், ‘பெரியாரியலாளர்களின் இயக்கப் பணிகள்’ என்ற தலைப்பில் தலைமைக்குழு உறுப்பினர் மடத்துக்குளம் மோகன் ஏப் 7 அன்றும், ‘புதிய கல்விக் கொள்கை’ என்ற தலைப்பில் தமிழ்நாடு அறிவியல் மன்றம் வீரா கார்த்திக் ஏப் 8 அன்றும், ‘புத்தமும் பெரியாரியமும்’ என்ற தலைப்பில் தமிழ்நாடு மாணவர் கழகம் சந்தோஷ் ஏப் 9 அன்றும், ‘பார்ப்பனீயம் அன்றும் இன்றும்’ என்ற தலைப்பில் கோவை மாவட்டச் செயலாளர் வெள்ளியங்கிரி ஏப் 10 அன்றும், ‘திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம்’ என்ற தலைப்பில் தேனி மாவட்டம் துரை ஏப் 11 அன்றும், ‘பண்பாட்டுத் தளத்தில் பெரியார்’ என்ற தலைப்பில் அய்யனார் ஏப் 12 அன்றும், ‘அம்பேத்கரின் பார்வையில் புரட்சி’ என்ற தலைப்பில் ஜெயபிரகாஷ் ஏப் 13 அன்றும் கருத்துரையாற்றினார்கள்.

ஏப் 14 புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வைக்கம் போராட்டம் குறித்து சிறப்பு கருத்தரங்க உரை நிகழ்த்தினார்.

ஏப் 15 முதல் காலை 11 மணிக்கு தொடங்கிய கருத்தரங்கில், ‘ஊரடங்கு சட்டங்கள் மற்றும் அடிப்படை உரிமைகள்’ குறித்து கழக வழக்கறிஞர் துரை அருண், ஏப் 16 ‘பெரியார் கண்ட களங்கள் - ஜாதி ஒழிப்பு’ - கொளத்தூர் குமார், ஏப் 17 ‘தமிழ்ப் புத்தாண்டும் தமிழர் திருநாளும்’ - கள்ளக்குறிச்சி மாவட்டத் தலைவர் மதியழகன், ஏப் 18 ‘நீதிக்கட்சி அரசு சாதித்தது என்ன?’ - தமிழ்நாடு மாணவர் கழக சபரிகிரி, ஏப் 19 ‘திராவிடர் இயக்கத்தால் தமிழர் அடைந்த நன்மைகள்’ - கோவை மாவட்ட செயலாளர் நிர்மல்குமார், ஏப் 20 ‘பெரியாரும் தமிழும்’ - தோழர் கனல்மதி, ஏப் 21 ‘புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்’ - அன்பு தனசேகர், ஏப் 22 ‘ வன்கொடுமை தடுப்புச் சட்டம் பற்றி ஒரு பார்வை’ - வேலூர் மாவட்ட செயலாளர் இரா பா சிவா, ஏப் 23 ‘ஆரியப் படையெடுப்பு’ - தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், ஏப் 24 ’தமிழ் இசையும் திராவிடர் இயக்கமும்’ - இசைமதி, ஏப் 25 ’பெண், உடை, அரசியல் - பெரியாரியல் பார்வை’ - திவிக வடசென்னை மாவட்ட செயலாளர் இராஜீ, ஏப் 26 ‘ஜாதி ஒழிப்பே உண்மையான விடுதலை’ - கடலூர் மாவட்ட அமைப்பாளர் மதன்குமார், ஏப் 27 ‘வைதீக மரபுக்கு எதிராக தமிழ் முற்போக்கு மரபு’ - காஞ்சி மாவட்டப் பொறுப்பாளர் இரவிபாரதி, ஏப் 28 ‘தாய்மொழி வழிக் கல்வி அவசியமும் மாநில கல்வி உரிமையும்’ - தருமபுரி மாவட்ட அமைப்பாளர் சந்தோஷ்குமார், ஏப் 29 ‘தேசியக் கல்விக் கொள்கை’ - வீரா கார்த்திக், ஏப் 30 ‘திவிக இயக்கப் பணிகள்’ - கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி ஆகியோர் பேசினர்.

உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு சிறப்பு கருத்தரங்கமாய் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘ஜாதியமைப்பும் உழைப்பாளர் தினமும்’ என்ற தலைப்பில் மே 1 அன்று கருத்துரையாற்றினார்.

அதன் பின்னர் காலை 10.30 மணிக்கே தொடங்கும் கருத்தரங்கம் ‘பெரியாரியல் நூல் வாசிப்பை பரவலாக்குவோம்’ என்ற அடிப்படையில் கருத்தரங்கில் பேசக்கூடிய தோழர்கள் கழக வெளியீடு அல்லது ஏதேனும் ஒரு நூலை தேர்ந்தெடுத்து வாசித்து அதிலுள்ள கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

மே 2 - சட்ட எரிப்புப் போராட்டம் திருச்சி செல்வேந்திரன் நூலைப் பற்றி விழுப்புரம் மாவட்டச் செயலாளர் பெரியார் சாக்ரடீஸ், மே 3 - ‘A Brief answer to the Big Questions – Stephen Hawkings’ நூலின் முதல் 5 பகுதியை பற்றி தமிழ்நாடு அறிவியல் மன்றம் அறிவழகன் முதலில் கருத்துரையாற்ற, ‘திராவிடர் இயக்கமும் வேளாளரும்’ பேராசிரியர் வேங்கடாசலபதி நூலைப் பற்றி கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கருத்துரையாற்றினார். மே 4 - ‘சங் பரிவாரின் சதி வரலாறு’ விடுதலை இராசேந்திரன் நூலைப் பற்றி திருப்பூர் மாவட்டச் செயலாளர் நீதிராசன், மே 5 - ‘ஜோதிடப் புரட்டு’ நக்கீரன் நூலைப் பற்றி தமிழ்நாடு அறிவியல் மன்ற ஆசிரியர் சிவக்குமார், மே 6 - ‘விஞ்ஞானிகளை அழித்த மதவெறி’ திவிக வெளியீட்டை பற்றி கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் இராமர் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

மே 7 - ‘உயர் எண்ணங்கள் 2’ தந்தை பெரியார் நூலைப் பற்றி தமிழ்நாடு மாணவர் கழகம் அறிவுமதி, மே 8 - ‘பணத்தோட்டம்’ அறிஞர் அண்ணா நூலைப் பற்றி பிரகாசு, மே 9 - ‘பெண்ணால் முடியும்’ மஞ்சை வசந்தன் நூலைப் பற்றி கோபி மணிமொழி, மே 10 - ‘கருஞ்சட்டை கலைஞர்’ கொளத்தூர் மணி எழுதிய நூலைப் பற்றி தமிழ்நாடு மாணவர் கழக அன்னூர் பொறுப்பாளர் விஷ்ணு, மே 11 - ‘ஜனநாயகத்தின் முட்டாள்தனம்’ தந்தை பெரியார் நூலைப் பற்றி சென்னிமலை கவிப்பிரியா, மே 12 - ‘பெரியார் அம்பேத்கர் இன்றைய பொருத்தப்பாடு’ ஆ இராசா எழுதிய நூலைப் பற்றி கோவை மு அறிவரசு, மே 13 - ‘இனி வரும் உலகம் தத்துவ விளக்கம்’ தந்தை பெரியார் நூலைப் பற்றி கொளத்தூர் சுதா, மே 14 - ‘பெண் மொழி மா’ ஏ.எஸ்.பத்மாவதி நூலைப் பற்றி சென்னை அறிவுமதி அன்பரசன், மே 15 - ‘தாலி ஒரு மாயை ஆணாதிக்க குறியீடு’ நல்லூரான் எழுதிய நூலைப் பற்றி ஈரோடு மணிமொழி, மே 16 - ‘இந்திய விடுதலையின் இறுதி நாட்கள்’ தார்க்ஷியா நூலைப் பற்றி கோவை மாவட்ட செயலாளர் வெள்ளியங்கிரி, மே 17 - ‘இந்துவாக நான் சாகமாட்டேன்’ புரட்சியாளர் அம்பேத்கர் நூலைப் பற்றி மேட்டூர் மதிவதனி, மே 19 - ‘இளைஞர்களே உங்களுக்கு தெரியுமா?’ திவிக வெளியீடு குறித்து இணையதள பொறுப்பாளர் விஜய்குமார் ஆகியோர் கருத்தரையாற்றினர்.

மே 20 - ‘இந்திய வரலாற்றில் பகவத் கீதை’ பிரேம் நாத் பசாஸ் நூல் குறித்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மே 21 - ‘தத்துவ தலைமை பாட்டாளியம், தலித்தியம் தமிழியம்’ தணிகைச் செல்வன் நூலைக் குறித்து சிவகாமி, மே 22 - ‘இந்து மதம் எங்கே போகிறது?’ அக்னிஹோத்திரம் இராமானுச தாத்தாச்சாரியார் நூல் குறித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மே 23 - ‘சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்’ முனைவர் வளர்மதி நூல் குறித்து வைத்தீஸ்வரி, மே 24, - ‘காஞ்சி சங்கராச்சாரி யார்? ஓர் ஆய்வு’ கி வீரமணி எழுதிய நூல் குறித்து யுவராஜ், மே 25 - ‘சடங்குகளின் கதை - அக்னிஹோத்திரம்’ இராமானுச தாத்தாச்சாரியார் நூல் குறித்து முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், மே 26 - ‘மபொசியும் ஆதித்தனாரும் தமிழ்த் தேசியத் தலைவர்களா?’ வாலாசா வல்லவன் நூலைப் பற்றி குகன், மே 27 - ‘1912லிருந்து 1973 வரை திராவிட இயக்க வரலாற்றுச் சுவடுகள்’ தஞ்சை மருதவாணன் நூலைப் பற்றி கொளத்தூர் சந்தோஷ், மே 28 - ‘மகத்தான ருஷ்யப் புரட்சியின் மலரும் நினைவுகள்’ சி.கே. மதிவாணன் நூலைக் குறித்து அன்பு தனசேகர், மே 29 - ‘திராவிட

(2ஆம் பக்கம்)

தலையங்கம்

## ‘ஹத்ராசு’ம் அயோத்தியும்

உ.பி. ஹத்ராஸ் மாவட்டம் இப்போது நாடு முழுவதும் உச்சரிக்கப்படும் பெயராகி விட்டது. அயோத்தியில் ‘இராமனு’க்கு கோயில் கட்டும் வேலையும் தீவிரமாக நடக்கிறது. ‘ஹத்ராசில்’ 18 வயது தலித் பெண், உயர் ஜாதி தாக்கூர் வெறியர்களால் கடத்தப்பட்டு கொடூரமான சித்திரவதை, பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, உயிரிழந்து விட்டார். காவல்துறை பெற்றோர்களுக்கு பெண்ணின் சடலத்தைக் காட்டாமலேயே நள்ளிரவில் எரியூட்டும் வேலையை முடித்ததோடு மாவட்ட ஆட்சித் தலைவர் பெண்ணின் பெற்றோர்களை மிரட்டியுள்ளார். வீடியோ ஆதாரங்கள் வெளி வந்திருக்கின்றன. ‘எங்கள் மகளை எவரும் வல்லுறவு செய்யவில்லை’ என்று ஒப்புதல் வாக்குமூலம் தர, பெற்றோர்களைக் கட்டாயப்படுத்தியிருக்கிறார்.

நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதற்கு ஆளும் பா.ஜ.க.விலிருந்தே எதிர்ப்புகள் கிளம்பியுள்ளதை சான்றாகக் கூறலாம். பா.ஜ.க.வின் நாடாளுமன்ற உறுப்பினரான ராஜ்வீர் தைலர், “இரவோடு இரவாக உடலை எரியூட்ட வேண்டாம் என்று மன்றாடினேன்; மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்கவில்லை. ஒரு எம்.பி.யாக இந்தக் கொடுமைக்கு வெட்கப்படுகின்றேன். நீதி கிடைக்கவில்லையெனில் எம்.பி. பதவியையும் துறந்து விடுவேன்” என்று கூறி இருக்கிறார். இதேபோல், கவுஷல் கிஷோர், வினோத் கொங்கார் என்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், உமாபாரதியும் வெளிப்படையான கண்டனங்களை உ.பி. அரசுக்கு எதிராகப் பதிவு செய்துள்ளனர். நேரில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறச் சென்ற காங்கிரஸ் முன்னணித் தலைவர்கள் ராகுல், பிரியங்கா கடும் ஒடுக்குமுறைகளை எதிர்கொண்டு தொடர் போராட்டத்துக்குப் பிறகு குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறியுள்ளனர்.

இவ்வளவுக்கும் பிறகு மனித நேயமற்ற உயர்ஜாதி வெறியர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக 144 தடை உத்தரவையும் மீறி முன்னாள் பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் ரஜ்வீர்சிங் பெகல்வின் என்பவரது இல்லத்தில் கூடி ஆலோசனை நடத்தியுள்ளனர்.

தலித் மக்கள் மீதான அடக்குமுறைகளும், தலித் பெண்கள் மீதான பாலுறவு வன்முறைகளும் நாடு முழுவதும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. ‘தேசியக் குற்றப் பதிவு ஆவணக் காப்பகம்’ கடந்த வாரம் வெளியிட்டுள்ள அறிக்கையில் 2018ஆம் ஆண்டை விட, 2019ஆம் ஆண்டில், பழங்குடிப் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் ஒப்பீட்டளவில் 26 சதவீதமும், தலித் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 7.3 சதவிதமும் அதிகரித்திருப்பதை சுட்டிக் காட்டுகிறது. உ.பி.யில் தலித் பெண்களுக்கு எதிராக 11 ஆயிரத்து 829 வழக்குகளும், இரண்டாவது இடத்தில் இராஜஸ்தானும் (6,794 வழக்குகள்), மூன்றாவது இடத்தில் பீகாரும் (6,544 வழக்குகள்) இடம் பெற்றுள்ளன.

இந்து சமூகமும் ஜாதிய கட்டமைப்பும் பிரிக்க முடியாமல் பிணைந்து இருக்கும் நிலையில் ஜாதியை அதன் கொடூரமான ஒடுக்குமுறைகளை அப்படியே வைத்துக் கொண்டு ‘இந்து’ ஒற்றுமை பேசுவதும், ‘இந்து தேசம்’ என்று கூப்பாடு போடுவதும் மக்களை ஏமாற்றும் நாடகம் அல்லவா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கிறது. ‘இந்து’ அடையாளத்துக் குள்ளேயே புதைந்து கிடக்கும் ஜாதிய முரண்பாடுகள் பற்றி பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ். சங் பரிவாரங்கள் ஏன் கள்ள மவுனம் சாதிக்கின்றன?

இந்து மதம் கட்டமைத்துள்ள ஜாதியமைப்பை எதிர்ப்பதாக இதுவரை பா.ஜ.க.விடமிருந்தோ, சங் பரிவாரங்களிடமிருந்தோ ஒரே ஒரு குரல் கூட ஏன் எழவில்லை?

பா.ஜ.க.விற்குள்ளேயே இப்போது ‘தலித்’ நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு குரலாகவும், பார்ப்பன உயர்சாதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேறு ஒரு குரலாகவும் பேசக் கிளம்பியிருப்பதற்கு என்ன பதிலை கூறப் போகிறார்கள்?

‘இந்து’ என்ற போர்வைக்குள் பார்ப்பனிய மேலாதிக்க ஜாதியப் படி நிலைகளைக் கட்டிக் காப்பதே இவர்கள் பேசும் ‘இந்து ராஷ்டிரம்’, ‘இந்துத்துவா’.

இராமன் கோயில் ‘அடிக்கல்’ பூஜைக்கு புரோகிதர்கள் மட்டுமே வருவார்கள். ஆனால் கோயில் கட்டுமானத்துக்கு பாறைகளையும் செங்கல்லையும் சுமக்க உழைக்கும் வர்க்கமான ‘சூத்திர–பஞ்சமர்கள்’ மட்டுமே வருவார்கள். இதைத்தான் நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

ஹத்ராஸ் தலித் பெண்ணின் மீதான கொடூரச் செயலை எங்கோ நடந்த, ஒரு கிரிமினல் குற்றமாகக் குறுக்கிப் பார்த்து விட முடியாது. இந்து தர்மத்தின் ஜாதிய கட்டமைப்போடு இணைத்துத்தான் பார்க்க வேண்டும்.

# பா.ஜ.க.வுக்குள்ளும் பெரியார் நுழைந்து விட்டார்

தமிழக பா.ஜ.க.வில் என்ன நடக்கிறது? தலித் சமூகத்தைச் சார்ந்த அக்கட்சித் தலைவர் முருகனும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த துணைத் தலைவர் அண்ணாமலை என்ற முன்னாள் அய்.பி.எஸ். அதிகாரியும், “பெரியார் சமூக சீர்திருத்தவாதி; சமூக நீதிக்கு பாடுபட்டவர்; அவருக்கு பிறந்த நாள் வாழ்த்து கூறுகிறோம். பெரியாரின் இந்துமத எதிர்ப்பு, கடவுள் எதிர்ப்பு கொள்கைகளையே எதிர்க்கிறோம்” என்று பேட்டிகளில் கூற, அந்த முகாமில் உள்ள மனுவாத பார்ப்பனர்களுக்கு ஆத்திரம் பீறிட்டுக் கிளம்பி விட்டது.

நாராயணன் திருப்பதி, கோலாகல சீனிவாஸ், ரங்கராஜ் பாண்டே போன்ற பார்ப்பனர்கள், பெரியாரைப் பேசினால் பா.ஜ.க. ஓட்டு வங்கி ஒழிந்து விடும்; ஆர்.எஸ்.எஸ். பாரம்பர்யம் வேறு; பெரியார் பாரம்பர்யம் வேறு; பெரியார் தனிநாடு கேட்டவர் என்றெல்லாம் வெளிப்படையாக கட்சித் தலைவர் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

தமிழ்நாட்டில் பெரியார் போன்ற தலைவர்களையெல்லாம் எதிர்த்துக் கொண்டு பா.ஜ.க.வை வளர்க்க முடியாது என்று டெல்லியில் கட்சி மேலிடம் கருதுவதாக ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு செய்தி வெளியிட்டிருக்கிறது.

பெரியாரையும் திராவிடர் இயக்கத்தையும் தரம் தாழ்ந்த வார்த்தைகளால் பேசி வந்த எச். ராஜாவின், தேசிய செயலாளர் பதவியையும் கட்சி மேலிடம் பறித்து விட்டது. தமிழ்நாட்டில் ‘வெறுப்பு - அருவறுப்பு’ அரசியலுக்கு தூபம் போட்ட தமிழகத்துக்கான பா.ஜ.க. மேலிட பொறுப்பாளரின் பதவிகளும் பறிக்கப்பட்டு விட்டன.

பெரியாரை வெளிப்படையாக எதிர்க்காமல் மதவாதத்தை மனுதர்ம அரசியலை நடத்தலாம் எனும் சூழ்ச்சி தமிழ்நாட்டில் எடுபடாது என்பதை சங்கிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

பா.ஜ.க.வை வளர்க்க வேண்டும் என்பதைவிட அதிகாரம் கொடி கட்டிப் பறக்கும் இந்தக் காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு பெரியார் இயக்கத்தை அழித்து விடலாம் என்று கற்பனைக் கனவில் களிப்புற்றுக் கிடக்கும் பார்ப்பனர்களும் அந்தப் பருப்பு இங்கே வேகாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா’ டி.ஆர். சேசைங்கார் தமிழில் க.ப. அறவாணன் நூலைப் பற்றி மேட்டூர் குமரேசன், மே 30 - ‘பார்ப்பனியத்தின் வெற்றி புரட்சியாளர் அம்பேத்கர்’ நூலைப் பற்றி சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ், மே 31 - ‘அன்னை நாகம்மையாரும் தோழர் கண்ணம்மாளும்’ முனைவர் வளர்மதி எழுதிய புத்தகத்தில் இருந்து பரத் சரவணன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

கருத்தரங்கத்தில் பேசியவர்கள் ஒரு தலைப்பின் கீழ் பேசினர். அந்த உரையிலிருந்து Team Link வாயிலாக இணைந்திருந்த கழகத் தோழர்களால் கேள்விகளும் கேட்கப்பட்டது. கருத்தாளர் பதில்களை அளித்தனர்.

இவ்வாறு தொடர்ச்சியாக 62 நாட்கள் கருத்தரங்கம் இடைவிடாது நடைபெற்றது. கருத்தரங்கத்தில், கழக தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள், மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள், கழகத் தோழர்கள் மற்றும் தமிழ்நாடு மாணவர் கழக தோழர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

கருத்தரங்கின் தொடக்கத்தில் பகுத்தறிவு பாடலை பாடி தோழர்கள் தொடங்கி வைத்தனர். ஒருவரோ அல்லது இருவரோ தினந்தோறும் புதிய பாடல்களை பாடி நிகழ்வை சிறப்பித்தது தோழர்களின் மத்தியில் சோர்விலாது கருத்தரங்கம் செல்ல வழிகாட்டியாக அமைந்தது. மேட்டூர் டிகேஆர் இசைக்குழுவின் சார்பில் கோவிந்தராஜ், அருள்மொழி அவர்களோடு இணைந்து கோவையில் இருந்து இசைமதி மற்றும் கிருஷ்ணன், திருப்பூரில் இருந்து யாழினி, யாழிசை, அமுதினி, பாண்டியநாதன், நஜிமுன்னிசா, பெரியார் பிஞ்சு சுருதி மற்றும் சாக்கோட்டை இளங்கோவன் ஆகியோர் பகுத்தறிவு பாடல்களை பாடினர்.

ஜுன் மாதங்களில் ஊரடங்கில் தளர்வுகள் அளிக்கப்பட்டதால் சிறப்புக் கருத்தரங்கங்கள் 29.06.2020 அன்று தொடங்கப்பட்டு ஒரு சில நாட்கள் இடைவெளிகளுடன் 17.07.2020 வரை மாலை 6.30 மணிக்கு நடைபெற்றது. கருத்தாளர்களை மாணவர் கழகத் தோழர்களின் அறிமுக உரையுடன் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழக தோழர்கள் மட்டுமல்லாது பிற அமைப்பு, இயக்கங்களை சார்ந்த தோழர்களும் திவிக கருத்தரங்கில் கருத்துரையாற்றினர். இந்நிகழ்வுகள் திராவிடர் விடுதலைக் கழக முகநூல் மற்றும் ’யூ டியூப்’ பக்கங்களில் நேரலையாகவும் ஸ்ட்ரீம்யார்ட் மூலம் பதிவேற்றப்பட்டன.

63ஆவது கருத்தரங்கம் ஜுன் 29 - ‘பெரியார் சுயமரியாதை இயக்கமும் பொதுவுடைமையும்’ என்ற தலைப்பில் கொளத்தூர் மணி; 64ஆவது கருத்தரங்கம் ஜுலை 1 - ‘இராவண காவியம்’ என்ற தலைப்பில் புலவர் செந்தலை கவுதமன் ; 65ஆவது கருத்தரங்கம் ஜுலை 3 - ‘கொரோனா காலத்திலும் ஜாதிய வன்முறைகள்’ என்ற தலைப்பில் எவிடென்ஸ் கதிர்; 66வது கருத்தரங்கம் ஜுலை 5 - ‘கரும்புலிகள் நாள் முதல் கரும்புலி மில்லர் வீரச்சாவு’ என்ற தலைப்பில் வழக்கறிஞர் தடா ஓ சுந்தரம்; 67 ஆவது கருத்தரங்கம் ஜுலை 6 - ‘சுற்றுச்சூழல் சீரழிவும் கொரோனாவும்’ என்ற தலைப்பில் பூவுலகின் நண்பர்கள் சுந்தர்ராஜன்; 68ஆவது கருத்தரங்கம் ஜுலை 8 - ‘பெரியாரும் திராவிடர் இயக்கமும் இலங்கையில் ஏற்படுத்திய தாக்கம்’ என்ற தலைப்பில் எழுத்தாளர் பாமரன்; 69ஆவது கருத்தரங்கம் ஜுலை 10 - ‘அம்பேத்கர் மீதான அவதூறுகள்’ என்ற தலைப்பில் தமிழ்நாடு சாக்கிய அருந்ததியர் சங்கத் தலைவர் மதிவண்ணன்; 70ஆவது கருத்தரங்கம் ஜுலை 11 - ‘பெரியார் மணியம்மை திருமணம்’ என்ற தலைப்பில் தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி; 71ஆவது கருத்தரங்கம் ஜுலை 12 - ‘க்ரீமிலேயரா? கிருமிலேயரா?’ என்ற தலைப்பில் தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஊழியர் சங்க செயலாளர் அன்பு தனசேகர்; 72ஆவது கருத்தரங்கம் ஜுலை 13 - ‘மாற்றுத் திறனாளிகள் ஒரு வித்தியாசமான பார்வை’ என்ற தலைப்பில் டிசம்பர் 3 இயக்கம் பேராசிரியர் தீபக்; 73ஆவது கருத்தரங்கம் ஜுலை 15 - ‘கல்வி வள்ளல் காமராசர் பிறந்தநாள் விழா சிறப்பு கருத்தரங்கம்’ கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன்; 74ஆவது கருத்தரங்கம் ஜுலை 17 - ‘குழந்தைகள் மீதான வன்முறைகள்’ என்ற தலைப்பில் தோழமை அமைப்பு தேவநேயன்; 75ஆவது கருத்தரங்கம் ஜுலை 20 - ‘திசை திருப்பும் காவிகள்’ என்ற தலைப்பில் பேராசிரியர் முனைவர் சுந்தரவள்ளி; 76ஆவது கருத்தரங்கம் ஜுலை 22 - ‘கீழடி’ என்ற தலைப்பில் வழக்கறிஞர் கனிமொழி மதி; 77 ஆவது கருத்தரங்கம் ஜுலை 27 - ‘உலக மயமாக்கலும் ஜாதிய முரண்களும்’ என்ற தலைப்பில் இளந்தமிழகம் செந்தில்; 78ஆவது கருத்தரங்கம் ஆக 12 - திவிக 9ஆம் ஆண்டு தொடக்கவிழா சிறப்பு கருத்தரங்கம் - கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ‘கடந்து வந்த பாதை’ என்ற தலைப்பிலும்; கழகத் தலைவர் கொளத்தூர் மணி ‘பெரியாரியல் எதிர்நோக்கும் சவால்கள்’ என்ற தலைப்பிலும் கருத்துரை; 79ஆவது கருத்தரங்கம் ஆக 16 - 2013-2019 வரையிலான 7 ஆண்டுகளின் பரப்புரை பயண ஒருங்கிணைப்பாளர்களின் கலந்துரையாடல்; 80ஆவது கருத்தரங்கம் ஆக 21 - ‘ பெரியாரும் மதமாற்றமும்’ என்ற தலைப்பில் கவிஞர் யாழன் ஆதி; 81ஆவது கருத்தரங்கம் ஆக 24 - ‘ஒடுக்கப்பட்டோரும் திராவிடர் இயக்கமும்’ என்ற தலைப்பில் எட்வின் பிரபாகரன்; 82ஆவது கருத்தரங்கம் ஆக 26 - ‘முற்போக்கு தமிழ் மரபு’ என்ற தலைப்பில் முனைவர் சி இளங்கோ; 83ஆவது கருத்தரங்கம் ஆக 30 - ‘திருநர் பார்வையில் சமூகம்’ என்ற தலைப்பில் கிரேஸ் பானு; 84ஆவது கருத்தரங்கம் ஆக 31 - ‘பெரியாரின் இடதுசாரி தமிழ்த்தேசியம்’ என்ற தலைப்பில் திவிக முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன்.

கருத்தரங்கம் சிறப்புடன் தொடர்ந்து நடைபெற கழகத் தலைவர், கழகப் பொதுச்செயலாளர், தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் சிவகாமி மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் தேன்மொழி அவர்கள் ஒருங்கிணைத்தனர்.

மேலும் கருத்தரங்கத்திற்கு தேவையான பதாகைகளை திருப்பூர் கதிர்முகிலன் மற்றும் அன்னூர் தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் விஷ்ணு உடனுக்குடன் வடிவமைத்துக் கொடுத்தனர்.

தொடர்ச்சியாக நடைபெற்ற இணையக் கருத்தரங்கங்களை தொய்வில்லாமல் இணையதள பிரிவு நடத்தி இந்த கொரோனா ஊரடங்கு காலத்திலும் பெரியாரியல் கருத்துக்களை மக்களிடம் சென்று சேர்த்தனர்.

**செய்தி விஜய்குமார்**
**இணையதள பொறுப்பாளர்**

## வரலாற்றுச் சான்றுகளுடன் கொளத்தூர் மணி உரை

# பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளுக்கு துணை நின்றவர் – வ.உ.சிதம்பரனார்

*05.09.2020 அன்று தமிழக மக்கள் முன்னணி ஒருங்கிணைத்த வ.உ.சி. பிறந்த நாள் இணைய வழி கருத்தரங்கத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.*

நாம் தமிழ்ச் சமூகத்திற்கு நினைவூட்ட வேண்டிய ஒரு பெரும் தலைவரைப் பற்றி அவருடைய பன்முகச் செயல்பாடுகளைப் பற்றி எடுத்துரைப்பதற்கான ஒரு வாய்ப்பாக நான் இதைப் பார்க்கிறேன். அவர் தொடக்க காலத்தில் விடுதலை வீரராக, குறிப்பாக திலகரோடு சேர்ந்து பணியாற்றிய தீவிரவாத பிரிவைச் சார்ந்தவராக வாழ்க்கையைத் தொடங்கி சிறைபட்டதை, விடுதலைக்குப் பின்னர் நடந்த மாற்றங்களை பலரும் பல கோணங்களில் பகிர்ந்து கொண்டுள்ளனர். நான் ஒரு பெரியார் இயக்கத் தோழன் என்ற முறையில் பெரியார் இயக்கத்தோடும், சுயமரியாதை இயக்கத்தோடும் அவர் கொண்டிருந்த தொடர்புகளைப் பற்றி சில செய்திகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். இந்தியாவில் நடைபெற்ற முதல் தொழிற்சங்க போராட்டமானாலும், அரசியல் ரீதியாக நடந்த முதல் வேலை நிறுத்தப் போராட்டமானாலும் அதில் குறிப்பிடத்தக்க முதல் போராட்டமாக இருந்தது வ.உ.சி.யின் 1908 - கோரல் மில் போராட்டம் தான். அந்த தொழிலாளர்களுக்கு 50 விழுக்காடு ஊதிய உயர்வு கேட்டார்; 50 விழுக்காடு உயர்வு கொடுக்கப்பட்டது. வார விடுமுறை இல்லாமலிருந்தவர்களுக்கு வார விடுமுறை வழங்கப்பட்டது. இப்படி பல உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தார். ஆனால் அதற்கான முன்முயற்சிகளும், மக்களிடம் எடுத்துச்சென்ற பரப்புரைகளும் முக்கியமானவை ஆகும். புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் கூறுவார் மக்களை கருத்துருவாக்கம் செய்ய கற்பி, கிளர்ச்சி செய், ஒன்று சேர் அதுபோல வ.உ.சி கற்பித்துத்தான் அந்த கிளர்ச்சியை முன்னெடுத்தார். அதன் காரணமாகத் தான் அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு, அவரது குடும்பத்தினருக்கு உணவிடுதல், அவர்களுக்கு ஆதரவாக மக்கள் பல போராட்டங்களை எடுத்தல் மட்டுமில்லாமல், அதற்கு பின் விபின் சந்தரபால் விடுதலையைக் கொண்டாடியதற்காக, கூட்டத்தில் பேசப்பட்ட செய்திகளுக்காக வ.உ.சி. மீது கைது, வழக்கு ஆகியவையும் தொடரப்பட்டது. ஆனால் அந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் அவர் இன்னும் கடுமையாகப் பேசியிருந்தார். சுப்பிரமணிய சிவா பேசுகிற போது இரஷ்யப் புரட்சி மக்களுக்கு நன்மை பயந்த புரட்சி என்று கூறினார்.

1905இல் நடைபெற்ற புரட்சியைக் கூறுகிறார். அப்போது இரண்டு செய்திகளை முன்னிறுத்தினார், வேலைநிறுத்தப் போராட்டம் எப்படி நடக்க வேண்டும் என்று. ஒன்று, அப்போது இங்கிலாந்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த போராட்டம். அது இயந்திரங்களை சிதைப்பது, பழுதாக்குவது, உடைப்பது என்று ஒரு போராட்டம். மற்றொன்று வேலை நிறுத்தம். நாம் இரண்டாவது முறையை எடுத்துக் கொண்டோம் என்று கூறியதற்கு அடுத்து பேசவந்த வ.உ.சி கூறினார், இல்லை நமக்கு இருக்கும் நிலைக்கு இரண்டு போராட்டங் களையும் முன்னெடுக்கும் நிலையில் இருக்கிறோம்; எடுத்தால் தான் என்ன? என்று. வ.உ.சி. அவர்களைக் கைது செய்யக்கருதிய ஆங்கில அரசாங்கத்தார் மக்கள் எழுச்சி காரணமாக, வ.உ.சி யை தூத்துக்குடியில் கைது செய்ய முடியாமல், நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு பேச்சுவார்த்தை என வரவழைத்து இரண்டு நாட்கள் பேச்சுவார்த்தை என நடத்திய பின்னர்தான் கைது செய்தார்கள். அதனால், முடிதிருத்தும் தொழிலாளி ஒருவர் அரசாங்க ஆதரவாளருக்கு முகம் மழிக்கும்போது அரசை ஆதரித்துப் பேசியதால் பாதியிலேயே நிறுத்தி விட்டார், ரங்கசாமி அய்யங்கார் அங்கிருந்து பாதி முகத்தை மறைத்துக் கொண்டார்; பலரிடம் கேட்டார்; யாரும் முகம்மழிக்க முன்வரவில்லை என்பதால் மதுரைக்கு சென்றுதான் மீதி பாதியை மழித்துக் கொண்டார். அப்படி மக்கள் ஆதரவு பெற்ற போராளியாகத் திகழ்ந்த வ.உ.சி, சிறைக்குப் போய் வெளியே வரும்போது வரவேற்க ஆளில்லாமல் இருக்கிற நிலையை கேள்விப்படுகிறபோது தான் பல்வேறு சிந்தனை ஓட்டங்களுக்கு நாம் ஆட்படுகிறோம்.

1907 ஆம் ஆண்டு காங்கிரஸ் சூரத் மாநாடு. அம்மாநாட்டில்தான் மேடையை நோக்கி செருப்பு வீசப்பட்டது. அந்த மாநாடு சிறப்பாக நடைபெற வேண்டும்; திலகர் தலைமையில் இயங்கிய காங்கிரஸ்



- ★ **முடிதிருத்தும் தொழிலாளி ஒருவர் அரசாங்க ஆதரவாளருக்கு முகம் மழிக்கும்போது அரசை ஆதரித்துப் பேசியதால் பாதியிலேயே நிறுத்திவிட்டார், ரங்கசாமி அய்யங்கார் அங்கிருந்து பாதி முகத்தை மறைத்துக் கொண்டார்;**
- ★ **திலகர் கீதைக்கு உரை எழுதினார்; வ.உ.சியோ கீதையை மறுத்து திருக்குறளுக்கு உரை எழுதினார்.**
- ★ **தலித் மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டி அடைக்கலம் தந்தவர், வ.உ.சி.**

தீவிரவாதப் பிரிவைச் சேர்ந்தவர்கள் கூட்டம் அதிகமாக இருக்க வேண்டும் என்பதற்காக வ.உ.சி அவர்களுக்கு அனுப்பபட்ட தந்தியை ஏற்றுக் கொண்டு இங்கிருந்து நூறு பேரை அழைத்துக் கொண்டு போகிறார், சொந்த செலவில் 50 பேரையும், மண்டையம் சீனிவாச்சாரி என்பவர் செலவில் 50 பேரையும் அழைத்துக் கொண்டு போகிறார். ஆனால் அவரின் நிலை மீண்டும் சிறைவாசம்முடிந்து விடுதலை ஆனபின்னர் தலைகீழாக மாறுகிறது. அடுத்து கல்கத்தாவில் 1917 இல் அன்னிபெசன்ட் தலைமையேற்ற மாநாட்டிற்கும் போகிறார். ஆனால் வந்தவுடன் காங்கிரஸ் தலைவர்களுடன் கலந்து பேசுகிறார், அதில் பெரியாரும் இருக்கிறார். ஸ்ரீரங்கத்தில் கலந்து பேசுகிறார்கள் அதில், சீனிவாச்சாரி அய்யங்கார்களெல்லாம் இருக்கிறார்கள் அதில் அன்னிபெசன்டிற்கு எதிரான ஒரு நிலையை எடுக்கிறார். திலகரை ஆதரித்தவர்; திலகரைத் தீவிரமாக பின்பற்றியவர்தான். ஆனால் திலகர் ஆதரவு காட்டும் அன்னிபெசண்டை, தமிழ்நாட்டில் ஸ்மார்த்த பார்ப்பனர்களுக்கு ஆதரவாக செயல்பட்டார் என்பதால் எதிர்த்தார்.

திலகர் கீதைக்கு உரை எழுதினார்; வ.உ.சியோ கீதையை மறுத்து திருக்குறளுக்கு உரை எழுதினார். தன்னுடைய தனித்துவத்தை பாதுகாத்தவராகவே எப்போதும் அவர் இருந்திருக்கிறார். அந்த மாநாட்டிற்குப் பிறகு 1919இல் அமிர்தசரஸ் மாநாடு. அந்த மாநாடு ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு அடுத்து நடந்த மாநாடு. அந்த மாநாட்டிற்கும் பெரியாரும் போகிறார். அப்படி போகிறபோது, சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த என். தண்டபாணி பிள்ளையும் உடன் போகிறார். அவர் பெரியாரோடு அவரது அனைத்து முன்னெடுப்புகளுக்கும் துணையாக நின்றவர். வ.உ.சி யின் வரலாறு நெடுகிலும் அவர் வருகிறார். அந்த மாநாட்டிற்கு போகிறபோதுதான்,பெரியார் முதல் வகுப்பு பயணச் சீட்டு எடுக்கிறார். காங்கிரஸ், சுயமரியாதை காலத்திற்குப் பின்னர்தான் எளிய வாழ்க்கை முறையைப் பெரியார் பின்பற்றினார். அதற்கு முன்னர் முதல் வகுப்பு பயணம் தான் செய்கிறார். அப்போது வ.உ.சி அவர்களோ வறுமையின் காரணமாக பயணத்திற்கு கூட வழியில்லாமல் தான் இருக்கிறார். அப்போது தண்டபானி பிள்ளை சென்று அனைவருக்கும் இரண்டாம் வகுப்பு பயணச் சீட்டு எடுத்து கொண்டு வந்து, மீதித் தொகையை வ.உ.சி இடம் கொடுக்கிறார் தண்டபாணி.

ஏனென்றால் திரும்பி வருவதற்கு தொகை வேண்டுமல்லவா? அதனால். அப்படித்தான் அந்த மாநாட்டிற்கு செல்கிறார்கள். அம்மாநாட்டின் போதுதான், அந்நகரில் இருந்த, படுகொலை நடந்த ஜாலியன்வாலா பூங்கா சென்று துப்பாக்கி குண்டுகளால் சுவற்றில் உள்ள அடையாளங்களையெல்லாம் பார்க்கிறார்கள். அந்த மாநாட்டிற்கு சென்று வந்த பின்னர் தான், அதுவரை ஆதரவாளராக இருந்த பெரியார், காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராகி, முழுமையாக காங்கிரசில் செயல்பட தொடங்கினார். அந்த மாநாட்டிற்குப் பின்னரும் வ.உ.சி வறுமையில் தான் இருந்தார். சென்னையில் வசித்து வந்தார். சென்னையிலும் அவர் அமைதியாக இருந்து விடவில்லை. டிராம்வே தொழிலாளர் போராட்டத்தில் இதே எம்.தண்டபானி பிள்ளை தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு சென்று உரையாற்றுகிறார். போராட்டத்திற்கான வேலைகளையும் செய்கிறார்.1920 இல் நாகப்பட்டினத்தில் நடைபெற்ற இரயில்வே போராட்டத்திற்கு செல்கிறார். அதற்குப் பின்னால் 1925 நவம்பரில் பெரியாருடன் இவரும் காங்கிரசை விட்டு வெளியே வருகிறார். வகுப்புரிமை தீர்மானத்திற்கு கூட ஆதரவாகவேத்தான் இருக்கிறார். அதைப்பற்றி, 1928இல் ஒரு நிகழ்வில் வ.உ.சி. பேசுகிறார். நாகப்பட்டினத்தில் தேசபக்த சமாஜ்யம் ஏழாம் ஆண்டு விழா. அதில் பெரியார் படத்தை திறந்து வைக்கிறார். அந்த விழாவில் கூறுகிறார், "எனக்கு நாயக்கரை 20 வருடங்களாகத் தெரியம் நானும் அவரும் ஒரே இயக்கத்தில் சேர்ந்து வேலை செய்து வந்தோம். அந்த இயக்கத்தில் சில அயோக்கியர்கள் வந்து புகுந்த பிற்பாடு நானும் அவரும் விலகி விட்டோம். பிறகு நாயக்கர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படும் சுயமரியாதை இயக்கத்தைப் பார்த்து, அந்த இயக்கம் மற்ற எல்லா இயக்கத்தினிலும் நல்ல இயக்கம் என்பதால் அந்த இயக்கத்திற்கு நானும் என்னாலான உதவிகளை செய்து வருகிறேன்" என்று இரண்டு மணி நேரம் சுயமரியாதை இயக்கத்தின் தேவைகளை பற்றி பேசியிருக்கிறார். குடி அரசிலும் அந்த உரை பதிவாகியிருக்கிறது. அதே போல சேலத்தில் 1927 இல் நடைபெற்ற மாநாட்டில் தான் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதோர் பற்றியும் பார்ப்பனர்களின் மேலாதிக்கத்தைப் பற்றியும் பேசுகிறார். அவரின் ஜாதி ஒழிப்பு சிந்தனைகள் சிலவற்றை நாம் கூற வேண்டும்.

வழக்கறிஞராக அவர் பணியாற்றிவந்தபோது வழக்காடுவதற்கு வந்து போன ஒரு தோழர் மயக்கமுற்றுக் கிடப்பதைப் பார்த்து அவரை தேற்றி என்ன ஆனது என்று செய்தியைக் கேட்கிறார். அவர் சொல்கிறார் வழக்கு நடந்து கொண்டே இருக்கிறது; நானும் வந்து கொண்டே இருக்கிறேன் என்கிறார். அவரிடம் விவரங்களை கேட்டறிந்து இனி வராதே என்று கூறி அனுப்புகிறார். வழக்கை நடத்தி வெற்றி பெற்று செய்தியை மட்டுமே அனுப்புகிறார். அதை தன்னுடைய தன் வரலாறு கவிதையில் கூட எழுதுகிறார். "முடிமனில் என்னுடை முன்னோர் நாள் முதல் / அடிமை புரியும் அறிவினைக் கொண்ட / வேத நாயகம்" எனும் மேம்படு பள்ளனை / ஏது மில்லாமலே எண்ணிலா வழக்கில் / அமிழ்த்தனர் பேலீசார்; அனைத்தினும் திருப்பினேன்" என்று குறிப்பிடுகிறார். அதுபோலவே, இரண்டு கண்களையும் இழந்த ஆதரவற்ற இராமையா தேசிகன் என்ற ஒரு 'குலத்தில் குறைந்தவரையும்' தமது இல்லத்தில் உணவிட்டுப் பாதுகாத்தவர் வ.உ.சி. பார்வையற்ற அவருக்கு வ.உ.சி. அவர்களின் மனைவி உணவு ஊட்டி வந்துள்ளார். அதுகுறித்து தனது தன் வரலாற்றில், "சிவப்பொருள் உணர்ந்த தேசிகன் ஒருவனென் / தவப்பயனால் இலம் தங்கப் பெற்றேன் / ஊனக் கண்ணினை ஒழித்தவன் நின்றதால் / தானக் குறையினை தவிர்த்திட ஊட்டினள் / குலத்தில் அன்னோான் குறைந்தவன் என்றென் / தலத்தில் உள்ளோர் சாற்றினர் குற்றம்" ...... எனக் கூறியுள்ளார்.

(தொடரும்)

## பரசுராமனுக்கு 70 அடி சிலை வைக்கிறார், மாயாவதி

*கான்ஷிராம் உருவாக்கிய பகுஜன் சமாஜ் கட்சிக்கு அவரது வாரிசாக தலைவராகியிருக்கும் மாயாவதி, வாக்கு வங்கி அரசியலுக்காக கான்ஷிராம் கொள்கைகளையே குழி தோண்டி புதைத்து வருகிறார்.*

*சங் பரிவாரங்கள் இராமன் கோயில் கட்டும் இயக்கத்தைத் தொடங்கியபோது கான்ஷிராம் அதற்கு எதிர்நிலைப்பாடு ஒன்றை எடுத்தார். சம்பூகன், ஏகலைவன் போன்ற விளிம்பு நிலை புராண நாயகர்களை வெகுமக்களின் அடையாளமாக்கி இயக்கம் நடத்தினார்.*

*இப்போது மாயாவதி, இராமன் கோயில் கட்டும் கட்சிகளுக்கு மாற்றாக, பார்ப்பன அவதாரமாகப் பேசப்படும் 'பரசுராமனை' தலையில் தூக்கி சுமக்கிறார். ஷத்திரியர்களை ஒழிப்பதற்காகவே பார்ப்பன பரசுராமன் அவதாரம் எடுத்ததாகவும் தனது கோடரியால் சத்திரியர்களை 'பூண்டோடு' ஒழித்ததாகவும் புராணங்கள் கதை விடுகின்றன. மாயாவதி 70 அடி உயரத்தில் அந்த பரசுராமனுக்கு சிலை வைக்கப் போவதாக அறிவித்துள்ளார். முலாயம் சிங்கின் சமாஜ் வாடி கட்சியும் தன் பங்கிற்கு மாவட்டந்தோறும் பரசுராமன் சிலைகளை வைக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. அதற்குப் போட்டியாக மாயாவதி வெளியிட்ட அறிவிப்பு இது?*

*கான்ஷிராம் – பகுஜன் சமாஜ் கட்சிக்கு தந்த அடையாளங்களை தலைகீழாகப் புரட்டிப் போடுகிறார், மாயாவதி.*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தேசிய கல்விக் கொள்கையை எதிர்த்து கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்கள்

தேசிய கல்விக் கொள்கை அறிக்கை, இஸ்ரோ முன்னாள் அதிகாரி கஸ்தூரிரங்கன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவால் 2018 டிசம்பர் மாதம் தயாரிக்கப்பட்டு, 2019 ஜூன் 1ஆம் தேதி மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் வலைதளத்தில் தேசிய கல்வி கொள்கை அறிக்கை ஆங்கிலம், இந்தியில் மட்டும் வெளியானது. வெளியானதிலிருந்து 30 நாட்களுக்குள் கருத்து சொல்ல வேண்டும் என்று அரசு கால நிர்ணயமும் அறிவித்திருந்தது. பல மொழிகள் பேசக்கூடிய மாநிலங்கள் இருந்தும் மாநில மொழிகளில் அறிக்கை வெளியாகவில்லை என்று எதிர்ப்பு வந்தவுடன் தேசிய கல்வி கொள்கை சுருக்கமான வரைவை தமிழில் வெளியிட்டார்கள்.

இந்த நிலையில் திராவிடர் விடுதலைக் கழகம் ஓராண்டுக்கு முன்பே 2019 செப்டம்பர் 17 இல் பரப்புரை பயணத்தை நடத்தியது. ‘சமூக நீதியை பறிக்காதே; புதிய கல்வித் திட்டத்தை திணிக்காதே’ என்ற முழக்கங்களுடன் தமிழகம் முழுவதும் கழகம் தேசிய கல்விக் கொள்கைக்கு எதிரான பரப்புரை பயணத்தை மேற் கொண்டது. பயணம் பள்ளிபாளையத்தில் நிறைவுற்றது. செப்டம்பர் 20ஆம் தேதி நடைபெற்ற நிறைவு மாநாட்டின் தீர்மானத்தில் காமராசர் நினைவு நாளான அக்.2 இல் புதிய கல்விக் கொள்கை நகல்களை கிழிக்கும் போராட்ட அறிவிப்பு வெளியானது. தமிழகம் முழுவதும் பல பகுதிகளில் புதிய கல்விக் கொள்கை நகல்கள் கழகத் தோழர்களால் கிழிக்கப்பட்டது. தோழர்கள் கைதானார்கள்.

இந்நிலையில், தேசிய கல்வி கொள்கை என்ற பெயரில் குலக் கல்வியை அவசர அவசரமாக மக்கள் கருத்துக்களை கேட்காமல், மக்களவையில் விவாதத்திற்குட் படுத்தாமலும், கொரோனா ஊரடங்கை பயன்படுத்தி கடந்த ஜூலை 29 ஆம் தேதி அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. கொரானா காலத்திலும் கழகம் இந்த அறிவிப்பை எதிர்த்து -

*புதிய கல்விக் கொள்கையை – தமிழக அரசே! நடைமுறைப் படுத்தாதே!*

*நமக்கான கொள்கையை நாமே வகுத்துக் கொள்வோம்!*

என்ற முழக்கங்களுடன் ஆக. 3ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்துமாறு கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஜூலை 31ஆம் தேதி அறிவித்தார்.

03.08.2020 அன்று, ஈரோடு வடக்கு மாவட்டம், சேலம் மாநகரம், ஆத்தூர், நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம், குமாரபாளையம், இராசிபுரம், மடத்துக்குளம், செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி, கோவை மாநகரம், திண்டுக்கல், கள்ளக்குறிச்சி நயினார்பாளையம், குடியாத்தம், பழனி, மேட்டூர், திருப்பூர் மாநகரம், மயிலாடுதுறை, ஈரோடு தெற்கு, அன்னூர், தர்மபுரி பென்னாகரம் ஆகிய பகுதிகளிலும். 04.08.2020 அன்று மதுரை, 05.08.2020 அன்று சென்னையிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் ஒத்த கருத்துடைய இயக்கங்களும் கலந்து கொண்டன. முகக்கவசம் அணிந்து தனி நபர் இடைவெளியுடன் ஆர்ப்பாட்டங்கள் கட்டுப்பாடாக நடந்தன.

தமிழக அரசு 03.08.2020 அன்று, தேசிய கல்விக் கொள்கையில் இடம் பெற்றுள்ள மும்மொழியை நடைமுறைப்படுத்த முடியாது என்று அறிவிப்பு வெளியிட்டது. மேலும், தேசிய கல்விக் கொள்கை தமிழகத்தில் நடைமுறைப் படுத்தப்படுவது பற்றி மக்கள் கருத்து கேட்ட பின் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தது.

**வாசகர்களுக்கு**

**கொரோனா ஊரடங்கு காரணமாக கடந்த மார்ச் 19, 2020-க்குப் பிறகு ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வெளிவர இயலவில்லை. 8.10.2020 முதல் மீண்டும் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ தனது பயணத்தைத் தொடங்குகிறது.**

**– ஆசிரியர்**

## தமிழ்நாடு மாணவர் கழகத்தின் இணைய வழி கருத்தரங்குகள் – நூல் வாசிப்பு நிகழ்வுகள்

# இளைய தலைமுறையின் எழுச்சி

கொரானா ஊரடங்கு காலத்தில் தமிழ்நாடு மாணவர் கழக முகநூல் தளத்தில் மாணவர்கள், தோழர்கள் புத்தக வாசிப்பு எவ்வளவு முக்கியம் என்பதையும், அதனை ஊக்குவிக்கும் வகையிலும் ’நூல் அறிமுகம்’ என்னும் நிகழ்வை நடத்தினர். ஒரு நூலின் கருத்தினை காணொளியில் பேசி தொடர்ச்சியாக பதிவு செய்து வந்தனர்.

தோழர்கள் திருப்பூர் தேன்மொழி, திருப்பூர் பிரசாந்த், கொளத்தூர் கனலி, மேட்டூர் மதிவதனி, மேட்டூர் அறிவுமதி, திருப்பூர் கனல்மதி, திருப்பூர் தென்றல், திருப்பூர் சந்தோஷ் ஆகியோர் பங்கேற்றனர். மேலும் பெரியாரிய கருத்துக்களை பாடல் களாகப் பாடியும், வாசகங்களாக பேசியும் சமூக வலைதளத்தில் குழந்தைகளும் தோழர்களும் பதிவு செய்து வந்தனர். ஜூன் 25ஆம் தேதி சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் 89ஆவது பிறந்தநாளில் அவரின் சாதனைகளைப் போற்றும் வகையில் தொடர் காணொளியிலும் தோழர்கள் சமூக வலைதளங்களிலும் பதிவு செய்தனர்.

தோழர்கள் மதிவதனி, ரம்யா, பிரசாந்த், கனலி, தேன்மொழி, விஷ்ணு, வைத்தீஸ்வரி, கனல்மதி, அறிவுமதி, சந்தோஷ் ஆகியோர் காணொளியில் பேசினர்.

கல்வி வள்ளல் காமராசரின் பிறந்தநாள் சிறப்புக் கருத்தரங்கம் 15.07.2020 மாலை 6.30 மணிக்கு நடை பெற்றது. மேட்டூர் அருள்மொழி, திருப்பூர் நஜ்முன்னிசா பகுத்தறிவு பாடல்களை பாடினர். தோழர்கள் மதிவதனி, கனலி, விஷ்ணு, சந்தோஷ் ஆகியோர் கருத்துரை வழங்கினர். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிறைவுரையாற்றினார். நிகழ்வை மேட்டூர் இரம்யா ஒருங் கிணைப்பு செய்தார். கலைஞர் நினைவு நாளையொட்டி ‘இழந்து வரும் மாநில சுயாட்சி’ என்ற தலைப்பில் மாணவர் கழகத் தோழர்கள் நான்கு முதல் 5 நிமிட காணொளி உரைகள் பதிவேற்றப் பட்டது.

பெரியாரின் 142ஆவது பிறந்த நாளை யொட்டி, 27.09.2020 மாலை 6 மணிக்கு, ‘திராவிடம் தந்த கல்விக் கொடை! அதை சிதைக்க விடாது நம் பெரியார் படை’ என்ற முழக்கத்தின் அடிப்படையில் கருத்தரங்கம் நடை பெற்றது. மேட்டூர் அருள்மொழி பகுத்தறிவுப் பாடல்களை பாடினார். நுழைவுத் தேர்வுகள் தகுதிக்கா ? தற்கொலைக்கா? என்ற தலைப்பில் மேட்டூர் மதிவதனி, சமத்துவத்தைப் புதைக்கும் தேசிய கல்விக் கொள்கை என்ற தலைப்பில், சேலம் யாழினி, திராவிடத்தின் அடையாளம் மொழிப் போர், என்ற தலைப்பில் திருப்பூர் கனல்மதி, மாணவர்களின் உரிமை காக்கும் மாநிலப்பட்டியலில் கல்வி, என்ற தலைப்பில், பொள்ளாச்சி சபரி ஆகியோர் கருத்துரை வழங்கினர். இறுதியாக கழகப் பொதுச் செய லாளர் விடுதலை இராசேந்திரன் நிறை வுரை வழங்கினார். கோவை விஷ்ணு நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்தார். நிகழ்வுகள் அனைத்தும் ’தமிழ்நாடு மாணவர் கழகம்’ முகநூல் பக்கத்தில் நேரலை மற்றும் காணொளிகளாக பதிவேற்றப்பட்டுள்ளது.

## இணையம் வழியாக கழகத்தின் மாவட்ட கலந்துரையாடல்கள்

கொரோனா ஊரடங்கு காரணமாக மாவட்டம் விட்டு மாவட்டம் செல்ல முடியாத சூழ்நிலையால், தலைமைக் குழு மற்றும் மாவட்ட கலந்துரையாடல் கூட்டங்கள் ‘Team Link’ வாயிலாகவே நடைபெற்றது. 30.06.2020 அன்று காலை 10:30 மணியளவில் தலைமைக் குழு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மாவட்ட கலந்துரையாடல் கூட்டங்கள், 12.07.2020 - ஈரோடு தெற்கு மாவட்டம், 14.07.2020 - சேலம் கிழக்கு மற்றும் சேலம் மேற்கு மாவட்டங்கள், 19.07.2020 - திருப்பூர் மற்றும் கோவை, 21.07.2020 - தர்மபுரி மற்றும் கிருட்டிணகிரி, 23.07.2020 - வேலூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, 26.07.2020 - விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், 28.07.2020 - திருச்சி, பெரம்பலூர், அரியலூர், 29.07.2020 - தஞ்சாவூர், நாகை, 30.07.202 - மதுரை, சிவகங்கை மாவட்டங்கள், 31.07.2020 - நாமக்கல், ஈரோடு வடக்கு மாவட்டம், 02.08.2020 - தூத்துக்குடி, நெல்லை மற்றும் குமரி, 09.08.2020 - தென் சென்னை, வடசென்னை ஆகிய தேதிகளில் கழகத் தலைவர், பொதுச் செயலாளர் உள்ளிட்ட தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்ட மாவட்ட கலந்துரையாடல்கள் இணையம் வழியாக நடைபெற்றன. கலந்துரையாடல்கள் அனைத்தும் மாலை 7 மணிக்கு தொடங்கி நடைபெற்றது.

## கழகக் களப் பணியாளர் தமிழரசு முடிவெய்தினார்

# நெகிழ்ச்சியுடன் நடந்த படத்திறப்பு



திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்ட செயல்வீரர், பெரியார் தொண்டர், கழகக் களப் பணியாளர் கோ. தமிழரசு (44) 11.06.2020 அன்று நள்ளிரவு உடல்நலக் குறைவால் முடிவெய்தினார்.

தோழர் தமிழரசு படத்திறப்பு நிகழ்வு சென்னை தலைமை அலுவலகத்தில் 17.09.2020 காலை 10 மணியளவில் நடை பெற்றது. நிகழ்விற்கு தென் சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி தலைமை வகித்தார். தோழர்கள் சி. இலட் சுமணன், தா. சூர்யா, கோ. வீரமுத்து, தென் சென்னை மாவட்ட அமைப்பாளர் க.சுகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தோழர் தமிழரசுவின் இயக்க உணர்வையும், தோழர்களுக்கு தாமாக முன் வந்து உதவிடும் பண்பையும் நெகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தனர்.

கருப்பு பிரதிகள் நீலகண்டன், ‘விரட்டு’ ஆனந்த், தலைமைக்குழு உறுப் பினர் அய்யனார் ஆகியோர் தமிழரசு அவர்களின் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். இறுதியாக கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் படத்தைத் திறந்து வைத்து உரை யாற்றினார். மாவட்டத் தலைவர் ம.வேழவேந்தன் நன்றி கூறினார்.

தோழர் தமிழரசு குடும்பத்துக்கு கழகத் தோழர்கள் திரட்டிய சிறு நிதி, அவரது துணைவியாரிடம் வழங்கப் பட்டது. கழக ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்கு தமிழரசு மூத்த மகள் யாழினி ரூ.2000/- நன்கொடையாக கழகப் பொதுச் செயலாளரிடம் வழங் கினார். நெகிழ்வுடனும் இயக்க உணர்வு டனும் நடந்த நிகழ்வுக்கு தோழர்கள் பெருமளவில் திரண்டு வந்திருந்தனர்.

## பாண்டேக்களே, பதில் உண்டா?

சங்கிகளின் கழிசடை கருத்துக்களை சுமந்து கொண்டு கூவிக் கூவி விற்பனை செய்யும் ரங்கராஜ் பாண்டே என்ற பேர் வழி, ‘ஆதன் தமிழ்’ என்ற ‘யு-டியூப்’புக்கு அளித்த பேட்டியில் மனுதர்மம் இப்போது எங்கே இருக்கிறது! அதை எல்லாம் தூக்கி வீசியாச்சு என்று கூறியிருக்கிறார். அப்படியானால் ஒரு கேள்வி!

பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர வர்ணப் பிரிவுகளை மனு சாஸ்திரம் கூறுகிறது. ‘பிராமண’ என்ற வர்ணத்தை மட்டும் இப்போதும் மனுதர்ம அடிப்படையில் அய்யர், அய்யங்கார், சாஸ்திரி, சர்மாக்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு காயத்ரி மந்திரம் ஓதி, அதன் ‘கல்வெட்டு நினைவு சின்னம்’ போல் பூணூலை மாட்டிக் கொண்டு திரிவது ஏன்? மனுதர்மத்தை உயிருடன் வைத்திருப்பது தானே இதன் நோக்கம்?

வேத மந்திரம் ஓதுதல், சாஸ்திர சடங்குகளை நிகழ்த்துதல், திருமணம், கருமாதி மந்திரங்களை உச்சரித்தல், கர்ப்பகிரகம் வரை நுழைந்து அர்ச்சனை செய்தல், கும்பாபிஷேகம் செய்தல், சிற்பி வடித்த கல்லுக்குள் வேத மந்திரத்தை ஓதி ‘கடவுளாக்குதல்’ போன்ற “பகவான் சேவை”களை (இது காசு வாங்கிக் கொண்டு செய்யும் சேவை) **வேதம் படித்த ஆண் பிராமணர்கள்** மட்டுமே செய்வதற்கு தகுதி படைத்தவர்கள் என்ற “மனுதர்மக் கட்டளைகள்” இப்போதும் பின்பற்றப்படுகிறதா இல்லையா? இது ‘மனுதர்மம்’ அல்லவா? ரங்கராஜ் பாண்டேக்கள் இப்படி எல்லாம் பேசுவதே மனுதர்மத்தின் எதிரொலி தானே?

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 8th October 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN